10/=

பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli


குரல் 01 அதிர்வு 27 புதன் மே 31 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## வடக்கில் மின்விநியோகம் ஜூனில் தடைப்படாது

ஜூன் மாதம் முழுவதும் வடக்கு மாகாணம் முழுதும் பகல் 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று வெளியான தகவல்களில் எந்த வித உண்மையுமில்லை என்று மின் சாரசபை அறிவித்துள்ளது.

"மின் விநியோக மார்க்கங்கள் சில வற்றில் வழமை போல திருத்த பணிகள் இடம்பெறவுள்ளன. அந்த மார்க்கங்க ளில் மட்டும், உரிய முன்னறிவித்தலு டன் மின் தடை குறிப்பிட்ட சில தினங்கள் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது. இது குறித்த முன்னறிவித் தல்கள் ஊடகங்கள் வாயிலாகவும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. ஆயி னும் சில இணையங்கள் இதனைத் திரித்து வடக்கு மாகாணம் முழுதும் மின்விநியோகம் ஒரு மாதத்துக்கு தடைப்படும் என்று தவறான தகவல் களை பரப்பியிருந்தன. வழக்கம் போல மின்விநியோகம் நடைபெறும் என்பதே சரியானது" என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (இ)

# அமைச்சரவை இன்றும் மாற்றம்



எரான் விக்கிரமரட்ண
இராஜாங்க அமைச்சர் -நிதி



வசந்த சேனநாயக்க
இராஜாங்க அமைச்சர்
வெளிவிவகாரம்



கரு பரணவிதாரண
பிரதி அமைச்சர்- தொழில் மற்றும் பயிற்சி அபிவி ருத்தித்திறன்



ரங்க பண்டார
இராஜாங்க அமைச்சர்
வடிகாலமைப்பு



ஹர்ஷ டி சில்வா
பிரதியமைச்சர் –
தேசியக் கொள்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவி னால் இன்று நண்பகல் திடீரென அமைச்சரவையில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

இதன் போது இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் பதவிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 22 ஆம் திகதி 9 அமைச்சர் மற்றும் ஒரு இராஜாங்க அமைச்சர் பதவிகளின் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்று 4 இராஜாங்க அமைச்சர் மற்றும் 3 பிரதி அமைச்சர் களின் பதவிகளில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

இதன்மூலம் வெளிவிவகார பிரதி அமைச்சராக செயற்பட்ட ஹர்ஷ டி சில்வா, தேசிய கொள்கை கள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சராகவும், அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சராக செயற்பட்ட எரான் விக்ரம ரத்ன, நிதி இராஜாங்க

04



லக்ஸ்மன் யாப்ப அபேவர்த்தன
இராஜாங்க அமைச்சர்–
தொழில் முயற்சியாண்மை



ரஞ்சன் ராமநாயக்க
பிரதியமைச்சர் –
சமூகநலன்புரி மற்றும் மலை நாட்டு அபிவிருத்தி

## அமெரிக்க மருத்துவமனையில் ரணில்!

நாட்டில் அனர்த்தம் ஏற்பட் டுள்ள சூழ்நிலையில், தள்ளிப் போட முடியாத மருத்துவச் சிகிச்சை ஒன் றுக்காகவே பிரதமர் ரணில் விக் கிரமசிங்க அமெரிக்கா சென்றுள்ள தாக அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். குறித்த மருத்துவச் சிகிச்சை பெறு வதை அவர் 18 மாதங்களாகத் தாம தித்து விட்டார். இனியும் தாமதிக்க முடியாத சூழ்நிலையிலேயே ரணில் அமெரிக்கா சென்றுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும், என்னவாறான மருத்துவ தேவைக் காக, பிரமதர் அமெரிக்காவுக்குச் சென் றார் என்ற விடயத்தை, அமைச்சர் ராஜித வெளிப்படுத்தவில்லை. (எ)

## காணாமல்போன அமைச்சர் கண்டுபிடிப்பு

தென்னிலங்கையில் கடந்த சில நாள்களாக மழை, வெள்ளம், மண் சரிவு என்பவற்றால் பெரும் அனர்த் தம் நேர்ந்தபோது, மக்களுக்கான மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு பொறுப்பான, அனர்த்த முகா மைத்துவ அமைச்சர் அநுர பிரியதர் சன யாப்பா நாட்டில் இருக்கவில்லை.

அனர்த்தம் நிகழ்ந்த செய்தியறிந் தும் அவர் நாட்டுக்கு உடனடியாகத் திரும்பவில்லை.

இப்படி அனர்த்தம் நிகழ்ந்தபோது காணாமல் போன அமைச்சர் அநுர பிரியதர்சன இன்று கொழும்பில் தோன்றினார். அத்துடன் " அனர்த் தம் தொடர்பில் உள்ளூர் ஊடகங் களில் மக்களைக் குழப்பும் வகை யான தகவல்களே அதிகம் வெளியா கின" என்று ஊடகங்கள் மீது பாய்ந்து கொண்டார் அமைச்சர். (அ-5)

## இலங்கையில் மர்மத் தொலைபேசிகள்

கையடக்கத் தொலைபேசிகளை ஒட்டுக் கேட் கவும், செயலிழக்கச் செய்யக்கூடிய துமான புலனாய்வுத் தொலைபேசிகள் இலங் கையில் விற்கப்படுவதாக தொலைத் தொடர் புகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.

2.4 கிஹா ஹேட்ஸ் அல்லது கிஹா ஹேட்ஸ் 5க்கும் குறைவான வலுவைக் கொண்ட இத்தகைய கையடக்கத் தொலை பேசிகளைப் பயன்படுத்துவது சட்டவிரோ தமானதல்ல. ஆயினும் இந்த எல்லைக்கு மேற்பட்ட அல்லது குறைவான கையடக் கத் தொலைபேசிகளை பயன்படுத்துவது இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் தடைசெய்யப்பட்ட வலு கொண்ட 50 கையடக்கத் தொலைபேசிகள் அண்மையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப் பின் போது கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-5)

## சாவகச்சேரியில் பேரணி




புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு புகைத்தல் எதிர்ப்பு பேரணி நிகழ்வு சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது. தென்மராட்சி பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மதுவரித்திணைக்களத்தினர் மற்றும் சாவகச்சேரி பொலிஸார் ஆகியோர் இணைந்து இப் பேரணியை நடத்தியுள்ளனர். சாவகச்சேரி பேருந்து நிலையத்திலிருந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி வரை குறித்த பேரணி இடம்பெற்றுள்ளது. (எ-4)


## யாழில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் வறட்சியால் பாதிப்பு

யாழ்ப்பாண மாவட்டத் தில் கடந்த வருட மாரி மழை வீழ்ச்சி குறைவடைந்ததன் கார ணமாக ஏற்பட்ட வறட்சி நிலையால் ஒரு இலட்சத் துக்கு அதிகமான மக்கள் பாதிப் படைந்துள்ளதாக யாழ்மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள் ளார். யாழ். மாவட்டத்தை சேர்ந்த வேலணை, ஊர்காவற் றுறை, காரைநகர், மருதங் கேணி மற்றும் கடற்கரையை அண்டிய பகுதியை சேர்ந்த 33 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து இருபதினாயி ரம் மக்கள் பாதிக்கப்பட் டுள்ளதாக அவர் தெரிவித் தார். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலகங்கள் ஊடாக பவுசர்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுவதாக தெரிவித்த அரச அதிபர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 6 புதிய பவுசர்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (எ-14)

## ஆஸ்பத்திரியில் ஞானசாரர்

கடந்த சில நாள்களாக தலை மறை வாக இருந்த, பொதுபல சேனா அமைப் பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானார தேரர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இன்று புதன்கிழமை அனுமதிக்கப்பட்டுள் ளார்.

கொழும்பு மேல் பிரதான நீதிமன் றத்தில் அவர் இன்று ஆஜராக உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது. நீதிமன்ற அவ மதிப்பு வழக்கில் இன்று அவர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்படலாம் என்று எதிர்வு கூறப் பட்டி ருந்தது. இந்த நிலையிலேயே திடீர் சுகயீனம் அவருக்கு ஏற்பட்டதாக வும், அதனால் வைத்திய சாலையில் அனு மதிக்கப்பட்டதாகவும் பொதுபலசேனா அமைப்பு தெரிவித்துள்ளது. (அ-5)



## முன்னாள் போராளிகள் நால்வர் விடுதலை



வவுனியா - பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத் தில், கடந்த ஒருவருடமாகப் புனர் வாழ்வு பெற்று வந்த முன்னாள் போராளிகள் நால்வர்

04

# பதிலடி!



வட கொரியா அடுத்தடுத்து ஏவுகணை சோதனைகளை நடத்திவரும் நிலையில், அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் பாதுகாப்புச் சோதனை ஒன்றை அமெரிக்கா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

கடந்த ஓராண்டில் மட்டும் சுமார் 9 ஏவுகணைகளை வடகொரியா பரிசோதனை செய்துள்ளது.

இந்நிலையில், வடகொரியாவை சமாளிக்கும் விதமாக ஏவுகணைகளை இடைமறித்துத் தாக்கி அழிக்கும் பாதுகாப்பு பரிசோதனையை அமெரிக்கா நடத்தியுள்ளது. கலிபோர்னியா மாநிலத்தில் நடைபெற்ற இந்தச் சோதனையின் போது, பசுபிக் பெருங்கடலில் உள்ள ஒரு தீவிலிருந்து ஏவப்பட்ட மாதிரி ஏவுகணையை, பாதுகாப்பு அமைப்பானது இடைமறித்து அழித்தது. இந்தச் சோதனை வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது என பென்டகன் தெரிவித்துள்ளது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை இடைமறித்துத் தாக்கி அழிக்கும் பாதுகாப்பு அமைப்பு சோதனையை அமெரிக்கா முதன் முறையாக வெற்றிகரமாக நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அமெரிக்காவை மிரட்டிய துப்பாக்கிதாரி



அமெரிக்காவின் ஓர்லாண்டோ சர்வதேச விமான நிலையத்தில் நேற்றிரவு கையில் துப்பாக்கியுடன் மர்மநபர் ஒருவர் நுழைந்ததையடுத்து அங்கு இரு மணி நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து விமான நிலையத்தை தற்காலிகமாக மூடிய பொலிஸார் துப்பாக்கி வைத்திருந்த நபரை மடக்கிப் பிடித்தனர்.

பின்னர் அவர் வைத்திருந்தது போலியான துப்பாக்கி என்பது தெரியவந்தது. அத்துடன் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதும் தெரியவந்தது. (ஒ)

## 'தி' நகரில் தீ



சென்னை தியாகராய நகரில் உள்ள உஸ்மான் வீதியில் பிரபல தனியார் துணிக்கடையில் இன்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்திற்குள்ளான துணிக்கடையின் மேல்தளத்தில் தங்கியிருந்த ஊழியர்கள் 11 பேரை தீ அணைப்புப் படையினர் மீட்டுள்ளனர். 4 மணி நேரப் போராட்டத்துக்குப் பின்னர் தீயணைப்புப்படையினர் ஊழியர்களை மீட்டனர்.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தகவல்கள் கூறுகின்றன. (எ)

## இறைச்சிக்கான போராட்டம்



இறைச்சிக்காக மாடுகளை விற்கத்தடை விதித்ததைக் கண்டித்து சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஸ்டாலின் தலைமையில் தி.மு.கவினர் இன்று காலை போராட்டம் நடத்தினர்.

மாடு, ஒட்டகம் போன்ற கால்நடைகளை இறைச்சிக்காக விற்கவோ, வாங்கவோ கூடாது என்று மத்திய அரசு கடந்த 23ஆம் திகதி தடை உத்தரவு பிறப்பித்தது.

இந்தச் சட்டத்தை எதிர்த்து மதுரை உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டதையடுத்து மத்திய அரசின் உத்தரவுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையிலேயே மத்திய அரசின் உத்தரவை எதிர்த்து தி.மு.க சார்பில் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. (எ)

## 50 பேர் பலி

ஆப்கானிஸ்தான் தலைகர் காபூலில் உள்ள ஈரான் தூதரகத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 50 பேர் வரை உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இந்தத் தாக்குதலுக்கு எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. எனினும் ஆப்கானிஸ்தானில் இது போன்ற தாக்குதல்களை தலிபான் பயங்கரவாதிகள்தான் நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதிரியாரான ரோபோ




ஜேர்மனியின் விட்டன் பெர்க் நகரில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் 'ரோபோ' ஒன்று பாதிரியாராக நியமிக்கப்பட்டுள்ளது. அது 'கடவுள் உங்களை ஆசீர்வதித்து பாதுகாப்பாராக' என்று பைபிளில் உள்ள வாசகத்தைக் கூறுகிறது.

குறித்த தேவாலயத்துக்கு வரும் பக்தர்களை இந்த ரோபோ ஆண் மற்றும் பெண் குரலில் வாழ்த்தி வரவேற்கிறது. மேலும் தனது 2 கைகளை உயர்த்தி அவர்கள் விரும்பும் மொழியில் ஆசி வழங்குகிறது.

இந்த 'ரோபோ'வுக்கு 'பிளஸ்யூ-2' என பெயரிடப்பட்டுள்ளது.

## மறந்தது தேசிய கீதம்



அமெரிக்காவில் நடந்த போர் வீரர்கள் நினைவு நாள் நிகழ்ச்சியின்போது ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தேசிய கீதத்தை உரக்கப் பாடினார்.

ஆனால் அவர் தேசியகீதத்தைப் பாடுவதை இடைநடுவில் நிறுத்திவிட்டார்.

இதனால் தேசியகீதத்தை டிரம்ப் மறந்துவிட்டார் என சமூக ஊடகங்களில் பலரும் கேலி செய்யத் தொடங்கியுள்ளனர்.

"தேசிய கீதத்தை மனப்பாடம் செய்யக்கூட உங்களுக்கு நேரம் இல்லையா..?" எனப் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## சர்ச்சையான சந்திப்பு!



அரசு முறை சுற்றுப் பயணமாக ஜேர்மனி சென்ற இந்தியப் பிரதமர் மோடி, நடிகை பிரியங்கா சோப்ராவை சந்தித்துப் பேசியமை சர்ச்சையையும் ஆச்சிரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பிரதமரை சந்தித்ததை மகிழ்ச்சியோடு பிரியங்கா சோப்ரா, தனது சமூக வலைத்தள பக்கங்களில் பகிர்ந்துள்ளார்.

நாற்பது நாட்களாக டில்லியில் போராடிய விவசாயிகளை சந்திக்க மறுத்ததும், நாடு முழுவதும் மாட்டிறைச்சி தடை விவகாரம் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் மோடி அதுகுறித்துக் கருத்து கூறாமல் நடிகையோடு உரையாடிக்கொண்டிருந்ததும், விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை, பிரதமர் முன்னால், கால் மேல் கால்போட்டு நடிகை அமர்ந்தமையும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. (ஒ)


## ஐ.சி.சி. சம்பியன் கிண்ணம் 2017

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் இணைந்து நடத்தும் ஐ.சி.சியின் எட்டாவது சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடர் (50 ஓவர்கள்) நாளை ஆரம்பிக்கின்றது.

**குழுநிலை:** 'ஏ', 'பி' என இரு குழு நிலை ஆட்டங்களின் முடிவில் இரு குழுக்களிலும் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

**போட்டி நடைபெறும் காலம் 1-18 ஜூன் 2017**

**மைதானங்கள்**




### ஏ

| திகதி | அணிகள் | இடம் |
|---|---|---|
| 1. | இங்கிலாந்து - பங்களாதேஷ் | ஓவல் |
| 2. | அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து | எட்பஸ்ரன் |
| 5. | அவுஸ்திரேலியா - பங்களாதேஷ் | ஓவல்* |
| 6. | இங்கிலாந்து - நியூஸிலாந்து | கார்டிப் |
| 9. | நியூஸிலாந்து - பங்களாதேஷ் | கார்டிப் |
| 10. | இங்கிலாந்து - அவுஸ்திரேலியா | எட்பஸ்ரன் |

### பி

| திகதி | அணிகள் | இடம் |
|---|---|---|
| 3. | இலங்கை - தென்னாபிரிக்கா | ஓவல் |
| 4. | இந்தியா - பாகிஸ்தான் | எட்பஸ்ரன் |
| 7. | பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா | எட்பஸ்ரன்* |
| 8. | இந்தியா - இலங்கை | ஓவல் |
| 11. | இந்தியா - தென்னாபிரிக்கா | ஓவல் |
| 12. | இலங்கை - பாகிஸ்தான் | கார்டிப் |

**அரையிறுதிப் போட்டிகள்**

| | | |
|---|---|---|
| 14. | ஏ முதல் அணி - பி இரண்டாவது அணி | கார்டிப் |
| 15. | பி முதல் அணி-ஏ இரண்டாவது அணி | எட்பஸ்ரன் |

**18. இறுதிப்போட்டி**

**குறிப்பு:** போட்டிகள் பி.ப. 3 மணிக்கு ஆரம்பிக்கும்.
*குறியீடுள்ளவை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கும். (இலங்கை நேரப்படி)




இலங்கையின் நம்பிக்கை நட்சத்திரம் லசித் மலிங்க



## உறங்கும் மணிக்கூடுகள்


யாழ்ப்பாணம் மணிக் கூட்டுக் கோபுரத்தில் உள்ள மணிக்கூடுகள் நீண்ட காலமாக இயங் காமல் காணப்படுகின் றன. இது தொடர்பில் யாழ்.மாநகர சபைக்கு பல முறை அறிவித்தும் இதுவரையும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். யாழ்.மாநகர சபை யால் 34 இலட்சம் ரூபா செலவில் குறித்த மணிக்கூட்டுக் கோபுரம் மறுசீரமைக் கப்பட்டு 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 5 மாதங்களாக மணிக்கூடு கள் பழுதடைந்த நிலை யிலேயே உள்ளன.(உ)

### மக்கள் பிரச்சினைகளுக்கு

## வாய்ப் பூட்டு?

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்கள் தனியே அரசியல் பேசுவதற்கான களமாக மட்டுமே இருக் கிறது என மக்கள் அமைப் புக்களின் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் பங்கேற்ற தமக்கு அழைப்பு விடுக்கப் படுகின்றபோதும் மக்கள் பிரச்சினைகளை பேசுவ தற்கு சந்தர்ப்பம் வழங்கு வதில்லை எனவும் குற்றஞ் சாட்டியுள்ளனர். யாழ். மாவட்ட செயலக கேட் போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கருத்து வெளி யிட்டுள்ள ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இணைத் தலைவர்களின் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மக்கள் தங்கள் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு இடமளிக் கப்படும் என்றார். (எ-20)

## இன்றைய கருத்தோவியம்



நன்றி: அந்த ஆட்டிக்கல



### மூதூர்ச் சம்பவத்தால்

## பெரும் குழப்பம்

"மூதூரைச் சேர்ந்த மூன்று சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய சம்பவம் மீண்டும் பெரும் அச்சத்தையும் குழப்பத்தையும் மக்களிடையே ஏற்படுத்தியிருக்கிறது. தெற்கில் பெரும் அனர்த்தம் நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் கிழக்கில் சிறுமிகளுக்கு நடந்த இந்த அநியாயம் அதற்குரிய கவனத்தைப் பெறமுடியாமல் போயுள்ளது "என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கவலை தெரிவித்துள்ளார். "நாட்டையே உலுக்கிய புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைக்கே இத்தனை மாதங்கள் கடந்தும்இன்னும் நீதி கிடைக்கவில்லை. பாலியல் குற்றம் புரிவோரின் தண்டனையை உறுதிப்படுத்துவதோடு எதிர்காலத்தில் இவை போன்ற துஷ்பிரயோகங்கள் மீள நிகழாமைக்கான நமது முயற்சிகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும், நடைமுறைப்படுத்த வேண்டும்" என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

### மலசல குழியருகே இறைச்சி


## ஹோட்டல் 'சீல்' வைப்பு



சுகாதாரச் சீர்கேடு காரண மாக ஹோட்டல் ஒன்றுக்கு சீல் வைக்கப்பட் டுள்ளது. மட்டக்களப்பு நகரில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் வெட்டப்பட்ட நிலையில் மலசல குழியருகே பெரு மளவான இறைச்சியும் பொதுச்சுகாதார பரி சோதகர்களால் மீட்கப் பட்டுள்ளது. அங்கு பெரு மளவான பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் மீட்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்நிலையிலேயே குறித்த ஹோட்டல் சீல் வைத் துள்ளதாக தெரிய வரு கின்றது. பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவர் தமக்கு வழங்கிய தகவலின் அடிப் படையிலேயே நேற்று மாலை திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற் கொண்டதாக புளியந்தீவு பொதுச்சுகாதார பரிசோத கர் எஸ்.அமுதமாலன் தெரிவித்துள்ளார். (எ)

### ரோந்து பொலிஸிடம் அகப்பட்ட

## ஆட்டுத் திருடர்கள்



கரணவாய் மண்டான் உப்புரோட்டில் ஆடொன்றை கடத்தமுற் பட்ட இருவர் பொலிஸா ரிடம் வசமாக மாட்டியுள் ளனர். நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமை யிலான பொலிஸார் நேற்று இரவு 11 மணிய ளவில் ரோந்து நடவடிக் கையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போதே ஆடு ஒன்று டன் சென்றுகொண்டிருந்த இருவரையும் பொலிஸார் மடக்கி பிடித்துள்ளனர். விசாரணைகளின் பின் குறித்த இருவரையும் நீதிமன்றத்தில் முன்னி லைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக நெல்லி யடி பொலிஸார் தெரிவித் துள்ளனர். (உ-11)

## காங்கேசன்துறை – காரைக்கால் கப்பல் சேவைக்கு வலியுறுத்தல்

காங்கேசன்துறையிலி ருந்து, தமிழகத்தில் உள்ள காரைக்கால் வரை கப்பல் போக்கு வரத்து தொடங்க வேண்டும் என இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜூன் சம்பத் வலியுறுத்தியுள்ளார். ஜூன் மாதம் நடராஜர் கோயில் ஆனித்திருமஞ்சன விழா நடை பெறவுள்ளது. இந்த விழாவில் பங்கேற்க இலங்கைத் தமிழர்கள் திரளானோர் சிதம்பரத் துக்கு வருவர். இலங்கைக்கும், தமிழகத்துக் கும் உள்ள உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், இலங்கைத் தமிழர்கள் சிதம்பரம் வருவதற்கு வசதியாக காங்கேசன்துறையிலி ருந்து காரைக்கால் வரை கப்பல் போக்கு வரத்து தொடங்க வேண்டும் என அவர் வலியு றுத்தியுள்ளார். (உ)



## தேர்தல் கனவு எனக்கில்லை

" எதிர்காலத்தில் இடம்பெறும் எந்தவொரு தேர்தலிலும் நான் குதிக்க மாட்டேன். அரசியலுக்கு வரும் நோக்கம் எனக்கு அறவே இல்லை" என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய தெரிவித்துள்ளார். "இரட்டை பிரஜாவுரிமையை இல்லாமற் செய்து கொள்வீர்களா?" என ஊடகவியலா ளர் ஒருவர் வினாத் தொடுத்தபோது, "தேர்தலில் போட்டியிடும் எண்ணம் என்னிடம் இல்லை என்பதனால், இரட்டை பிரஜாவுரிமை, எனக்குப் பிரச்சினை இல்லை" என்று கோத் தபாய பதிலளித்துள்ளார். (அ)

## மக்களுக்கு உதவிடுங்கள்

### உருத்திரகுமாரன் அழைப்பு



இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கு சாத்தியமான வழிக ளில் மனிதாபிமான உதவிகளை வழங்கு மாறு, புலம்பெயர் தமிழர்களுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களைத் தணிக்க, சாத்தியமான எல்லா வழிகளிலும் தன்னார்வ அடிப்படையில் புலம்பெயர் தமி ழர்கள் உண்மை யான ஆதரவை வழங்க வேண்டும். இதுபோன்ற இயற்கை அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கு, உள்ளூர் உட்கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (எ)

### சமமாக நிவாரணம் வழங்குக

அனைவருக்கும் சம அடிப் படையில் நிவாரணங்களை வழங்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க பணிப் புரை விடுத்துள்ளார். அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நிவாரணங்களை வழங்குவதில் எவ்வித கட்சி பேதமும் இன்றி சம அளவில் நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித் துள்ளார். (அ)

## நாளை நாளும் கோளும்

01.06.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 18ஆம் நாள்

சப்தமி பி.ப. 12.18 வரை | மகம் பி.ப. 04.49 வரை | அமிர்த்தசித்தயோகம்

இராகுகாலம் 01.22-02.52 | சுபநேரம் 07.22-08.52 | எமகண்டம் 05.52-07.22

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முயற்சி | சாந்தம் | பெருமை | மேன்மை | நிறைவு | யோகம் | உதவி | உழைப்பு | இரக்கம் | நட்பு | சினம் | வீண்செலவு |

எதிரொலி
Ethiroli

# வீட்டுக்கு 2,500,000 உயிருக்கு 100,000

சீரற்ற காலநிலை அனர்த்தம் காரணமாக சேதமடைந்த வீடுகளுக்கு 2.5 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ஓர் உயிரிழப்புக்கு தலா ஒரு லட்சம் ரூபா என்ற அடிப்படையில் நட்டஈடு வழங்கப்படும் எனவும் அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை அனர்த்தம் காரணமாக வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழில் முயற்சிகளுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்ய 2 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனர்த்தம் காரண மாக 1402 வீடுகள் முற்று முழுதாக அழிவடைந் துள்ளதாகவும் மேலும் சுமார் ஏழாயிரம் வீடுகள் பகுதி அளவில் சேதம டைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(உ)

## மீண்டும் பேச்சுக்கள்

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர் பாக, சீனாவின் மேர்ச் சன்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துடன், இலங்கை அரசு மீண்டும் இன்று பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.


இந்தத் துறைமுகம் குறித்து முன்னர் பேச்சுக்களில் இலங்கை அசர தரப்பில் பங்கு கொண்ட அமைச்சர் களான மலிக் சமரவிக் கிரம, சரத் அமுனுகம, அர்ஜூன ரணதுங்க ஆகியோருடன் கலந்தாலோசித்த பின்னரே இந்தப் பேச்சுகளில் தான் கலந்து கொள்வதாக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள் ளார். (ஆ)

# அந்த நாள் ஞாபகம்.....!



2004.05.31

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.



2005.05.31

இலங்கைப் புலனாய்வுத்துறை உயர் அதிகாரி மேஜர் நிசாம் முத்தலிப் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்

# அரசாங்கத்தை பலப்படுத்தவே அமைச்சரவை மாற்றம்



தேசிய அரசாங்கத் தினை பலப்படுத்துவதற் காகவே அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

"அமைச்சரவை மாற்றத்தின் போது பல்வேறு விமர்சனங்கள் காணப்பட்ட போதும் தற்போது அவையனைத் தும் சிறப்பாக கையாளப் பட்டுள்ளன. கடந்த காலங்களில் இரவில் நித்திரைக்குச் செல்லும் அமைச்சர் காலையில் எழும்போது வேறொரு அமைச்சராகவோ அல்லது அமைச்சுப்பதவியை இழந்தவராகவோ தான் இருப்பார். குறிப்பாக மொரகாகந்த திட்டத்தை அங்குரார்ப் பணம் செய்த மறுதினம் அந்த அமைச்சுப்பதவியை என்னிடத்திலிருந்தே பறித்தெடுத்தனர். நாங்கள் அவ்வாறு செய்யவில்லை" என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (எ-9)

# குடிநீர் வழங்கல் முற்றாக பாதிப்பு



வெள்ளம் காரணமாக சுமார் 80 சதவீதமான நீர் வழங்கல் கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளதாக, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

எனினும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குறித்த நீர் வழங்கல் கட்டமைப்புகளைச் சுத்திகரிக்கும் பணிகள், இன்று முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும், முப்படையினர் மற்றும் தன்னார்வத் தொண்டுப் பணியாளர்கள், இப்பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் தீப்தி சுமனசேகர தெரிவித்தார்.(அ)

# அரசும் கூட்டமைப்பும் ஒன்றேதான்!



"தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் அரசையும் பிரித்துப் பார்ப்பது தவறு. இரண்டுமே ஒன்றுதான். கூட்டமைப்பு இன்று அரசின் ஒரு அங்கம்" என, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் போராட்டம் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற போது, அதில் கலந்துகொண்ட கஜேந்திர குமார் மேலும் கூறியதாவது,

"கடந்த மார்ச் மாதம் ஐ. நா, இலங்கை அரசுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கியது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அனுமதியோடுதான். உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் கூட்டமைப்பு அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தால் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டிருக்காது.

ஆகவே பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது இருப்பதன் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்ற அதே வேளை, அதற்கு சமமாக கூட்டமைப்பும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றார்.(அ)

# பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பிணை



மாலபே தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்தை மூடுமாறு கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்ட, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் லஹிரு வீரசேகர உள்ளிட்ட மாணவர் குழுவினர் இன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் இன்று புதன்கிழமை பகல் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது தலா 2500 ரூபா ரொக்கப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது.

குறித்த ஆர்ப்பாட்டத் தின்போது மாணவர்க ளால் பொதுச் சொத்துக் கள் சேதமாக்கப்பட்ட தாகக் குற்றஞ்சாட் டப்பட்டிருந்தது. (அ-5)

# ஓட்டோவில் அங்கஜன் அணி உதவிப் பொருள் சேகரிப்பு



வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவ பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் நடவடிக்கை எடுத்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினரின் இளைஞர் மற்றும் மகளிர் அணியினர் ஒவ்வொரு பிரதேசத்திலும் நிவாரணப் பொருட் களை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது ஓட்டோ வாகனத்தில் ஒலி பெருக்கியில் அறிவித்தல் செய்தவாறு உதவிப் பொருட்கள் சேகரிக்கும் நடவடிக்கையில் அவர் கள் ஈடுபட்டிருந்ததை காண முடிந்தது. (உ)

# யாழ். நூலக எரிப்பு நினைவேந்தல் நாளை

யாழ். பொது நூலக எரிப்பின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தலும் கலந்துரையாடலும் நிகழ்வு யாழ். பொது நூலக முன்றலில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட் டில் நாளை மாலை 6 மணிக்கு குறித்த நிகழ்வு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

**அமைச்சரவை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சராகவும், லக்ஷ்மன யாப்பா அபேவர்தன அரச தொழில் முயற்சிகள் மற்றும் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக வும், பாலித ரங்கே பண்டார நீர்பாசன இராஜாங்க அமைச்சராக வும், வசந்த சேனாநாயக்க வெளிவிவகார இராஜாங்க அமைச்சராகவும், பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக மேலதிகமாக கந்துரட்ட அபிவிருத்தி பிரதி அமைச்சராகவும், கருணாரத்ன பரணவித் தாரன தொழில் பயிற்சி பிரதி அமைச்சராக வும் நியமிக்கப்பட்டுள்ளனர். (எ-5)

**நால்வர்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகத்துடன் இன்று இணைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப்பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக, சர்வ மதத் தலைவர்கள், முன்னாள் போராளிகளின் குடும்ப உறுப்பினர்கள், பொலிஸ ார், விமானப்படையினர் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ)

# ஐ.நா குழு இலங்கைக்கு

இலங்கையில் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து ஆராய, ஐக்கிய நாடுகள் சபையின் அகதி களுக்கான நிறுவனம் மூன்று குழுக்களை அனுப்பியுள்ளது.

இவர்கள் சீரற்ற காலநிலையால் அதிகம் பாதிக்கப்பட்ட இரத்தின புரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளில் தமது நடவ டிக்கைகளை முன்னெ டுக்கவுள்ளதாக குறிப்பி டப்பட்டுள்ளது. (அ)


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

'எதிரொலி' மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை



வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு: 021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com


இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 31.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.